**ஆகஸ்ட் – 18**

# TNPSC துளிகள்

- ❖ சென்னையைச் சேர்ந்த 19 வயது S. ரோஹித் கிருஷ்ணா, இந்தியாவின் 89வது கிராண்ட் மாஸ்டராகியுள்ளார்.
- ❖ ஐதராபாத்தில் உள்ள நேரு விலங்கியல் பூங்காவானது, விலங்கு நோய் கண்டறிதல் மற்றும் ஆராய்ச்சிக்காக தென்னிந்தியாவின் முதல் உள்ளக உயிரியல் பாதுகாப்பு மூன்றாம் நிலை (BSL-3) ஆய்வகத்தை அமைக்க உள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் மாநிலக் காவல்துறை மற்றும் வனத்துறை ஆகியவை இணைந்து தொடங்கிய அசாமின் 'ஃபால்கன் நடவடிக்கை', ஒற்றைக் கொம்பு காண்டா மிருகங்களின் வேட்டையாடுதலை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது.
- ❖ சுதந்திரத் தினத்திற்கு முன்னதாக எந்தவொரு குறைபாடும் இல்லாத வகையிலான பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, எல்லைப் பாதுகாப்புப் படையின் மேகாலயா எல்லைப்புறப் பிரிவு, இந்திய-வங்காளதேச எல்லையில் மாநிலக் காவல்துறையுடன் இணைந்து 'அலர்ட் நடவடிக்கையினை' நடத்தியது.
- ❖ இந்தியாவின் 20 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் கால்பந்து அணி மியான்மர் அணியைத் தோற்கடித்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு AFC U20 மகளிர் ஆசியக் கோப்பை 2026 போட்டிக்குத் தகுதி பெற்றது.
- ❖ BEML லிமிடெட் நிறுவனமானது, மலேசியாவிலிருந்து 1 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள வெளிநாட்டு இரயில்-மெட்ரோ ஒப்பந்தத்தினை வென்றுள்ளது.
- ❖ நாக்பூர்-புனே வந்தே பாரத் விரைவு இரயில் ஆனது, வர்தா, அகோலா, புசாவல் மற்றும் டவுண்ட் உள்ளிட்ட முக்கிய நிலையங்களை இணைத்து இந்தியாவின் மிக நீளமானப் பாதையில் இரயில் போக்குவரத்து சேவையினை வழங்குகிறது.
- ❖ இந்தியாவின் 79வது சுதந்திரத் தினத்தின் போது லடாக்கின் கார்கில் பகுதியில் விளைந்த வாதுமைப் பழங்கள் ஆனது சவுதி அரேபியாவின் ரியாத்தில் உள்ள லுலு உயர் சிறப்பு அங்காடியில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டன என்ற நிலையில் இது இந்தியா-சவுதி இடையிலான வேளாண் வர்த்தகத்தில் ஓர் உந்துதலைக் குறிக்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி விரிவாக்கம்

- ❖ ஜப்பானிய மூளைக்காய்ச்சல் (JE) தடுப்பூசி வழங்கீட்டுத் திட்டத்தைத் தமிழ்நாடு சுகாதாரத் துறை மேலும் 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது.
- ❖ 1 முதல் 15 வயது வரையிலான மொத்தம் 27,63,152 குழந்தைகளுக்கு ஜப்பானிய மூளைக் காய்ச்சல் தடுப்பூசியின் ஒற்றைத் தவணை வழங்கப்படும்.
- ❖ இந்தத் தடுப்பூசி வழங்கீடு இயக்கமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் சிறுவர் காப்பக இல்லங்களில் நடத்தப்படும்.
- ❖ மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதித்து, கடுமையான சிக்கல்கள் அல்லது மரணத்திற்கு வழி வகுக்கின்ற JE என்பது கொசுக்களால் பரவும் ஒரு விலங்கு வழி வைரஸ் தொற்று நோயாகும்.
- ❖ JE தடுப்பூசியானது, 2007 ஆம் ஆண்டு முதல் தொற்றுள்ள 15 வருவாய் மாவட்டங்களில்

செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தற்போது இந்தத் திட்டம் ஆனது பின்வரும் மேலும் ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் விரிவுபடுத்தப் பட்டுள்ளது: சென்னை (ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட இரண்டு மண்டலங்களைத் தவிர்த்து), செங்கல்பட்டு, திருநெல்வேலி, தென்காசி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம் மற்றும் வேலூர்.





## HAWK அமைப்பு

| Feature | Description |
|---|---|
| System Type | Cloud-Based Information Management System |
| Purpose | Manage interlinked databases of wildlife crime, wildlife criminals, and wildlife mortality |
| Objective | Prevent wildlife crimes and curb Illegal Wildlife Trade (IWT) |
| Connectivity | Real-time connection with entire state forest department |
| Access Control | Access restricted through access levels |
| | **HAWK** Hostile Activity Watch Kernel |
| Interface | Mobile and desktop interfaces |
| Modularity | Divided into various interconnected modules with stand-alone functions |
| Scalability | Scalable system to meet the needs of state forest departments, customizable for each state's procedures and regional language interface |
| Data Security | Government and industry standard security measures applied to ensure data security |
| Development | Started in 2017 by a joint team of Kerala Forest Department & Wildlife Trust of India |
| Launch | Officially launched in 2019 in Kerala; now the official system of the state forest department |
| Implementation | Customized version initiated in 2022 in Karnataka in partnership with Karnataka forest department ICT cell, being implemented statewide |

- தமிழ்நாடு மாநில வனத்துறையானது HAWK (விரோத நடவடிக்கைகளுக்கான முக்கிய கண்காணிப்பு அமைப்பு) என்ற டிஜிட்டல் வனவிலங்குக் குற்றக் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கேரளா மற்றும் கர்நாடகாவிற்கு அடுத்தபடியாக WTI (இந்திய வனவிலங்கு அறக் கட்டளை) மற்றும் NTT DATA ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட HAWK அமைப்பினை ஏற்றுள்ள 3வது மாநிலம் இதுவாகும்.
- இதன் கீழான பிரிவுகளில் பெரெக்ரைன் (குற்ற மேலாண்மை), ஷிக்ரா (இறப்புப் பதிவு), ஹாரியர் (குற்றவாளிகளின் கண்காணிப்பு) மற்றும் கெஸ்ட்ரல் (மரபுத் தரவுகள்) ஆகியவை அடங்கும்.

- அதிகளவு குற்றம் நடைபெறும் இடங்களைக் கண்டறிதலுக்கான NER (பெயரிடப்பட்ட நிறுவன அங்கீகாரம்), வலையமைப்புப் பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்பு மாதிரியாக்கத்தினை HAWK கொண்டுள்ளது.
- இது CCTNS (குற்றம் மற்றும் குற்றக் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள்) உடன் API (செயல்பாட்டு நிரலாக்க இடைமுகம்) ஒருங்கிணைப்பை ஆதரிக்கிறது.

## e-Shram பதிவுகள்




- 2.17 கோடி பேர் என்ற இலக்கில் 93.13 லட்சம் பதிவுகளுடன் தமிழ்நாடு e-Shram இலக்கில் 43% இலக்கினை மட்டுமே அடைந்துள்ளது.
- e-Shram வலை தளமானது, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், மத்திய அரசினால் தொடங்கப் பட்டது.
- இது வலை தளத் தொழிலாளர்கள், இணையவழி மூலம் திரட்டப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் தற்காலிக தொழிலாளர்களை ஒரு மையப்படுத்தப்பட்ட நலச் சேவை கட்டமைப்பிற்குள் கொண்டுவருகிறது.
- இதில் பதிவு செய்யப்பட்ட நபர்கள் பிரதான் மந்திரி ஆயுஷ்மான் பாரத் சுகாதாரத் திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபாய் மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட அரசாங்க ஆதரவு சலுகைகளுக்கு தகுதியுடையவர்களாகிறார்கள்.
- தமிழ்நாட்டில் பெண்களின் பதிவுகள் (59.4 லட்சம்) ஆனது ஆண்களின் பதிவு எண்ணிக்கையை விட (33.7 லட்சம்) அதிகமாகும்.
- மொத்த e-Shram பதிவுகளில் தமிழ்நாடு முதல் 10 மாநிலங்களுக்குக் கீழே அடுத்த இடத்தில் உள்ளது.
- 6.66 கோடி இலக்குக்கு எதிராக 8.39 கோடி தொழிலாளர்கள் பதிவு செய்யப் பட்டு உள்ளதுடன், உத்தரப் பிரதேச மாநிலமானது, e-Shram பதிவுகளில் முதலிடத்தில் உள்ளது.


# தேசியச் செய்திகள்

## நீண்ட காலம் பணியாற்றும் மத்திய உள்துறை அமைச்சர்

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்றுடன், ஆறு ஆண்டுகள் மற்றும் 65 நாட்கள் பதவியில் இருந்த அமித் ஷா மிக நீண்ட காலம் பணியாற்றிய மத்திய உள்துறை அமைச்சரானார்.
- பாஜக மூத்த தலைவர் L. K. அத்வானியின் சாதனையை அவர் முறியடித்தார்.
- அவரது பதவிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முடிவுகளில் சரத்து 370 ரத்து செய்யப்பட்டது மற்றும் வெற்றிகரமான மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும்.




## மக்கள்தொகை திட்டம் 2025





- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று, சட்டவிரோதமாக ஊடுருவும் மக்களால் ஏற்படும் ("குஸ்பைத்தியர்கள்") மக்கள்தொகை அச்சுறுத்தலுக்கு எதிரான ஒரு திட்டத்தினை இந்தியா அறிவித்தது.
- இந்த நெருக்கடியை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சமாளிக்க ஓர் உயர் அதிகாரம் கொண்ட மக்கள்தொகை பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்படும்.
- இந்த ஊடுருவல்கள் வேலைவாய்ப்புகளைப் பாதிப்பதாகவும், பெண்களைக் குறி

வைப்பதாகவும், பழங்குடியின நிலங்களைக் கைப்பற்றுவதாகவும் கூறப்படுகிறது.

- எல்லைப் பகுதிகளில் மக்கள்தொகை இட மாற்றங்கள் தேசியப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பதற்றம் போன்ற கவலைகளை எழுப்புகின்றன.
- ஊடுருவலில் இருந்து தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றினைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

## சுதர்சன் சக்ரா திட்டம்




- 2035 ஆம் ஆண்டிற்குள் சுதர்சன் சக்ரா திட்டத்தின் கீழ் இந்தியா ஓர் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வான் வழிப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும்.
- இந்த அமைப்பு ஆனது மருத்துவமனைகள், இரயில்வே மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற உத்திசார் மற்றும் பொதுமக்கள் இருக்கும் பகுதிகளுக்கு பாதுகாப்பை வழங்கும்.
- இந்தத் திட்டத்திற்குப் புராணக் கதைகளில் கூறப்படும் கிருஷ்ணரின் கேடயமான சுதர்சன் சக்ராவின் பெயர் இடப்பட்டுள்ளது.
- பத்து ஆண்டுகளுக்குள் தேசியப் பாதுகாப்புக் கவசத்தினை விரிவுபடுத்துதல், வலுப் படுத்துதல் மற்றும் நவீனமயமாக்குவதே இதன் நோக்கமாகும்.
- தற்போது, இந்தியாவில் ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூன்று S-400 எறிகணை அமைப்புகள் உள்ளன.

## 5,000 மீட்டர் ஆழ அட்லாண்டிக் நீச்சல்


- இரண்டு இந்தியக் கடலடி (நீரில் மூழ்கி ஆய்வு செய்பவர்கள்) ஆய்வாளர்கள் அட்லாண்டிக் பெருங்கடலில் 4,025 மற்றும் 5,002 மீட்டர் ஆழத்திற்கு சென்றுள்ளனர்.
- பிரான்சின் IFREMER உடன் இணைந்து, நாட்டில் எனும் பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பலைப் பயன்படுத்தி இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.
- 5,000 மீட்டருக்கு மேல் மனிதர்களைக் கொண்டு செல்லும் திறன் கொண்ட ஆறுக்கும் குறைவான நாடுகளுடன் இந்தியாவும் தற்போது இணைகிறது.

- 2027 ஆம் ஆண்டிற்குள் 6,000 மீட்டர் ஆழத்தினை எட்டும் இலக்கை நோக்கிய இந்தியாவின் சமுத்திராயன் திட்டத்திற்கு இது ஒரு முன்னோடியாக அமைகிறது.
- MATSYA-6000 நீர்மூழ்கிக் கப்பல் ஆனது, ஆழ்கடல் ஆய்வுத் திட்டத்தின் கீழ் மூன்று இந்திய நீர்மூழ்கி ஆய்வு வீரர்களை 6,000 மீட்டர் ஆழத்திற்குக் கொண்டு செல்லும்.




# பொருளாதாரச் செய்திகள்

## சரக்கு மற்றும் சேவை வரி மறுசீரமைப்பு



Rate revisions

The 12% and 28% GST slabs will be done away with soon. Of these, 99% of items currently in the 12% slab will be moved to the 5% rate and 90% of goods and services in the 28% bracket will move to 18% slab

**CURRENT SLABS**

- 0.25% (diamonds & semi-precious stones)
- 3% (jewellery & precious metals)
- Apart from these, the slabs were 5%, 12%, 18%, 28% and compensation cess

**PROPOSED SLABS**

- Less than 1% (only items earlier in 0.25% and 3% slabs)
- Apart from this, the main slabs will be 5%, 18%, with a 40% rate applicable on only five to seven 'sin' goods

- நிதி அமைச்சகமானது, "தரநிலை" மற்றும் "தகுதி" நிலைகளுடன் எளிமைப்படுத்தப் பட்ட இரண்டு அடுக்கு சரக்கு மற்றும் சேவை வரி முறையை முன்மொழிந்துள்ளது.
- இரண்டு முதன்மை நிலைகளுக்கு வெளியே உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சரக்குகளுக்கு சிறப்பு விகிதங்கள் பேணப்படும்.
- மலிவுத் தன்மை மற்றும் நுகர்வை அதிகரிக்க பொதுவான வீட்டு மற்றும் நுகர்வோர் வாங்க விரும்பும் பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரியைக் குறைக்கும் திட்டங்கள் உள்ளன.
- இழப்பீட்டு வீத வரியின் ரத்து ஆனது விகிதச் சீரமைப்பிற்கான நிதி சார் வாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

- ❖ உள்ளீட்டு வரி வரவின் திரட்சியைக் குறைக்க தலைகீழ் வரிக் கட்டமைப்புகளை சரிசெய்வதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ தற்போதைய நான்கு அடுக்கு முறை 5%, 12%, 18% மற்றும் 28% ஆகும்.
- ❖ இனி 5% மற்றும் 18% அடுக்குகள் மட்டுமே தக்க வைக்கப்படும்.
- ❖ இது 12% மற்றும் 28% வரி வரம்புகளை முற்றிலுமாக நீக்குவதை உள்ளடக்கும்.
- ❖ 1%க்கும் குறைவான சலுகை விகிதம் மற்றும் ஐந்து முதல் ஏழு பொருட்களுக்கு 40% என்ற அதிக "பாவ வரி விகிதம்" அறிமுகப்படுத்தப்படும்.
- ❖ தற்போது 12% அடுக்கில் உள்ள 99% பொருட்கள் 5% விகிதத்திற்கு மாற்றப்படும், மேலும் 28% அடைப்பில் உள்ள 90% பொருட்கள் மற்றும் சேவைகள் 18%க்கு மாற்றப்படும்.
- ❖ இனி ஜிஎஸ்டி விகிதங்களுக்கு மேல் எந்த வகையான வரியும் இருக்காது.

## மொத்த விலைக் குறியீடு 2025

JULY WPI DATA

July WPI Inflation At -0.58% Vs -0.13% (MoM)

| SEGMENT | JULY | JUNE |
|---|---|---|
| Food | -2.15% | -0.26% |
| Fuel & Power | -2.43% | -2.65% |
| Manufactured Pdts | 2.05% | 1.97% |
| Primary Articles | -4.95% | -3.38% |
| Potato | -41.26% | -32.67% |
| Onion | -44.38% | -33.49% |
| Eggs, Meat & Fish | -1.09% | -0.29% |
| Vegetables | -28.96% | -22.65% |

- ❖ மொத்த விலைக் குறியீடு (WPI) பணவீக்கம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடர்ந்து இரண்டாவது மாதமாக -0.58% வீதத்தில் எதிர்மறை மண்டலத்திலேயே இருந்தது.
- ❖ 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், WPI பணவீக்கம் -0.13% ஆக இருந்த அதே நேரத்தில் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 2.10% ஆக இருந்தது.
- ❖ ஜூன் மாதத்தில் 3.75% ஆக இருந்த உணவுப் பொருட்கள் மீதான பணவாட்டம் ஜூலை மாதத்தில் 6.29% ஆக பதிவானது.
- ❖ ஜூன் மாதத்தில் 22.65% ஆக இருந்த பணவாட்டம் ஆனது ஜூலை மாதத்தில் 28.96% ஆகக் குறைந்ததுடன் காய்கறிகளின் விலையில் அதிக சரிவு ஏற்பட்டது.
- ❖ உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பணவீக்கம் ஆனது ஜூன் மாதத்தில் 1.97% ஆக இருந்த நிலையில், ஜூலை மாதத்தில் 2.05% ஆக சற்று அதிகரித்தது.
- ❖ எரிபொருள் மற்றும் மின்சாரத்தில் பணவாட்டம் ஆனது, ஜூலை மாதத்தில் 2.43% ஆகக் குறைந்தது, இது முந்தைய மாதத்தில் 2.65% ஆக இருந்தது.
- ❖ ஜூலை மாதத்தில் பதிவான சில்லறைப் பணவீக்கம் 8 ஆண்டுகளில் இல்லாத

அளவிற்கு 1.55% ஆகக் குறைந்தது.

❖ ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அடிப்படைக் கொள்கை விகிதத்தை 5.5% ஆக மாற்றாமல் வைத்திருந்தது.

# மாநிலச் செய்திகள்

## கேரள மாநில நிதி நிறுவனம்




❖ கேரள மாநில நிதி நிறுவனம் (KSFE) ஆனது, இந்தியாவில் 1 லட்சம் கோடி ரூபாய் வணிக வருவாயைக் கடந்த முதல் இதர வங்கி சாரா நிதி நிறுவனமாக (NBFC) மாறியது.

❖ KSFE நான்கு ஆண்டுகளில் 50,000 கோடி ரூபாயிலிருந்து 1 லட்சம் கோடி ரூபாயாக தனது வணிகத்தை இரட்டிப்பாக்கியது.

❖ 2024-25 ஆம் நிதியாண்டில் இந்த நிறுவனம் 512 கோடி ரூபாய் இலாபத்தை ஈட்டியது.

❖ KSFE ஆனது வட்டித் தள்ளுபடிகள் மூலம் 504 கோடி ரூபாய் நிதி உதவியை வழங்கியது மற்றும் கேரள மாநில அரசுக்கு 920 கோடி ரூபாய் பங்களித்தது.

❖ KSFE மாநிலக் கருவூலத்தில் சுமார் 8,925 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலையான வைப்புத் தொகைகளைக் கொண்டுள்ளது.

❖ கேரள மாநில முதல்வர் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்து "KSFE: The Courage of Kerala" என்ற KSFE நிறுவனத்தின் புதிய வாசகத்தினையும் வெளியிட்டார்.

## திஷா அபியான்

❖ மகாராஷ்டிரா மாநில அரசானது, 453 சிறப்புப் பள்ளிகளில் திஷா அபியான் என்ற திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது.

❖ இது அறிவுசார்க் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு சீரான மற்றும் தரமான கல்வியை வழங்குகிறது.

❖ ஜெய் வக்கீல் அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட இதற்கானப் பாடத்திட்டம் ஆனது, அறிவுசார் குறைபாடுகள் உள்ள நபர்களின் அதிகாரமளிப்புக்கான தேசிய நிறுவனத்தினால் (NIEPID) அங்கீகரிக்கப்பட்டது.

❖ இந்தக் குழுவிற்கு இது போன்ற விரிவான பாடத் திட்டத்தை ஏற்றுள்ள முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வீரதீர மற்றும் சேவைப் பதக்கங்கள் 2025




❖ 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதியன்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, 127 வீரதீர மற்றும் சேவைப் பதக்கங்களை வழங்கினார்.

❖ சிந்தூர் நடவடிக்கையின் பணியாளர்கள் 16 சௌர்ய சக்ரா பதக்கங்கள், 15 வீர் சக்ரா பதக்கங்கள், 4 கீர்த்தி சக்ரா பதக்கங்கள் மற்றும் ஏராளமான சேனா, நவோ சேனா மற்றும் வாயு சேனா பதக்கங்களைப் பெற்றனர்.

❖ மத்திய சேமக் காவல் படை (CRPF) ஆனது, மத்திய ஆயுதக் காவல் படைகளில் மிக அதிகமாக 23 வீரதீரப் பதக்கங்களை வென்றது.

❖ இதில் ஜம்மு & காஷ்மீர் மற்றும் மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளில் மேற் கொள்ளப் பட்ட வீர நடவடிக்கைகளுக்காக என்று வழங்கப்பட்ட 3 சௌர்ய சக்ரா பதக்கங்கள் மற்றும் 20 வீரதீரப் பதக்கங்கள் அடங்கும்.

❖ மகத்தான துணிச்சல் மற்றும் தலைமைத்துவத்திற்காக என்று எல்லைப் பாதுகாப்புப்

படையின் துணை ஆய்வாளர் முகமது இம்தேயாஜ் மற்றும் கான்ஸ்டபிள் தீபக் சிங்ககாம் ஆகியோருக்கு மரணத்திற்குப் பின்னதாக வீர் சக்ரா விருது வழங்கப் பட்டது.

- சர்வோத்தம் யுத் சேவா பதக்கங்கள் லெப்டினன்ட் ஜெனரல் இராஜீவ் காய் மற்றும் ஏர் மார்ஷல்கள் நர்மதேஷ்வர் திவாரி, நாகேஷ் கபூர், ஜீதந்திர மிஸ்ரா மற்றும் A.K. பாரதி போன்ற உயர் இராணுவத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டன.

### இல. கணேசன் மறைவு



- நாகாலாந்து ஆளுநரும் பாஜகவின் முன்னாள் துணைத் தலைவருமான L. கணேசன் சென்னையில் காலமானார்.
- இவர் முன்னதாக மணிப்பூர் ஆளுநராகவும், மேற்கு வங்காள (WB) ஆளுநராகவும் கூடுதல் பொறுப்பை வகித்தார்.
- தமிழ்நாட்டில் பாஜகவின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தார் மற்றும் மத்தியப் பிரதேச தொகுதியிலிருந்து மாநிலங்களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- ஒரே நாடு என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார் மேலும் தமிழ் அறிஞர்களை ஆதரிப்பதற்காக பொற்தாமரை இதழை நிறுவினார்.

## விளையாட்டுச் செய்திகள்

### ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2025

- தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோர் (U19) மற்றும் 22 வயதுக்குட்பட்டோருக்கான (U22) ஆசியக் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் இந்தியா 27 பதக்கங்களைப் பெற்றது.
- U19 அணி 3 தங்கம், 7 வெள்ளி மற்றும் 4 வெண்கலம் உட்பட 14 பதக்கங்களை வென்று ஒட்டுமொத்தப் பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- U22 அணி 1 தங்கம், 4 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் உட்பட 13 பதக்கங்களைப் பெற்றது.
- ரித்திகா, மகளிருக்கான 80-க்கும் மேலான கிலோகிராம் எடைப் பிரிவில் தங்கம் வென்றார் மற்றும் U22 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற ஒரே நபர் ஆவார்.

- மற்ற பதக்கம் வென்ற வீரர்கள் : யாத்ரி படேல் (மகளிர் 57 கிலோகிராம் எடைப் பிரிவில் வெள்ளி), பிரியா (பெண்கள் 60 கிலோகிராம் எடைப் பிரிவில் வெள்ளி), நீரஜ் (ஆடவர் 75 கிலோகிராம் எடைப் பிரிவில் வெள்ளி), மற்றும் இஷான் கட்டாரியா (ஆடவர் 90-க்கும் மேலான கிலோகிராம் எடைப் பிரிவில் வெள்ளி).




### கேலோ இந்தியா ASMITA




- கேலோ இந்தியா ASMITA கால்பந்து லீக் 2025-26 ஆனது இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால் மகாராஷ்டிராவின் ஜல்கானில் தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது, 13 வயதுக்குட்பட்ட பெண்களிடையே பெண்களின்

பங்கேற்பை அதிகரிப்பதன் மூலமும் திறமையை அடையாளம் காண்பதன் மூலமும் விளையாட்டுகளில் உறுதியான நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது.

- ❖ பழங்குடியின மற்றும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த வீரர்களை விளையாட்டில் சேர்ப்பதை இந்த லீக் நோக்கமாகக் கொண்டுள்ளதோடு மேலும் தொடக்க நிலை மற்றும் திறமையான விளையாட்டு வீரர்கள் ஆகிய இருவருக்குமான ஒரு தளத்தை வழங்குகிறது.
- ❖ விளையாட்டு மூலம் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதற்கான 'சப்கா சாத் சப்கா விகாஸ்' என்ற அரசாங்கத்தின் தொலைநோக்கு கொள்கையுடன் இந்த நிகழ்வு ஒத்துப் போகிறது.

# இதரச் செய்திகள்

## நுஷு எழுத்து வடிவம்

- ❖ சீனாவின் ஹுனான் மாகாணத்தில் உள்ள ஜியாங்யாங் பகுதியில் காணப்படும் பெண்கள் மட்டுமே அறிந்த 400 ஆண்டுகள் பழமையான ஒரே எழுத்து வடிவம் நுஷு ஆகும்.
- ❖ இது சகோதரத்துவம் மற்றும் அதிகாரமளிப்பின் அடையாளமாகக் கருதும் ஜெனரல் இசட் சீனப் பெண்களிடையே மறுமலர்ச்சியைக் குறிக்கிறது.
- ❖ நுஷு என்பது 17 ஆம் நூற்றாண்டின் ஒலிப்பு எழுத்துமுறை ஆகும் என்பதோடு இது பெண்களால் இரகசியத் தகவல் தொடர்பு அமைப்பாக உருவாக்கப்பட்டது.
- ❖ இந்த எழுத்து வடிவமானது, உள்ளூர்ப் பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்ட மெல்லிய வளைந்த இலை வடிவ எழுத்துக்களைப் பயன்படுத்துகிறது என்பதோடு மேலும் இது எழுத்துக்கள், பாடல்கள் மற்றும் பூத்தையல் மூலம் பகிரப் பட்டது.
- ❖ பெண்கள் முறையான கல்வியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்த காலத்தில் உருவான இது சகோதரத்துவம் மற்றும் நெகிழ் தன்மையின் அடையாளமாக மாறியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★